1970 மார்ச் 5]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முன்பே சொன்னேன். இதுவரை தோண்டப்பட்ட கிணறுகள் எதிலும் வாணிக முக்கியத்துவம் வாய்ந்த ஹைட்ரோ கார்பன் இருப்பதற்கான அறிகுறிகள் கிடைக்கவில்லை என்று எண்ணெய் எரிவாயு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மீண்டும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்யப்படவேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசினிடம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது.

Taxis with contract carriage permites

* 221 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether taxis with contract carriage permits in Tamil Nadu are allowed to ply in Pondicherry State also?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஆம். அவற்றின் அனுமதிச் சீட்டுகளில் புதுச்சேரி அதிகாரிகளின் மேற்கையொப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு அவை புதுச்சேரி மாநிலத்திலும் ஓட அனுமதிக்கப்படுகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: எந்தமாதிரியான வண்டிகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன? அப்படியானால் அரசாங்கம் என்ன என்ன அளவுகளை வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வாடகை மோட்டார் வண்டி, வாடகைக் காரர்கள், சுற்றுலா வாடகைக் கார்கள், சுற்றுலா பேருந்துகள் ஆகியவை புதுச்சேரியுடன் செய்து கொண்ட ஒப்பந்த அடிப்படையில் அனுமதிக்கப்படுகின்றன.

திரு. பி. வேலுசாமி: இதுபோல வேறு மாநிலங்களைச் சேர்ந்த எத்தனை வண்டிகள், கார்கள், லாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்தப் புள்ளி விவரம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லப்படும்.

திரு. நா. கிருட்டிணன்: இத்தகைய அனுமதி தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை.

திரு டி. மார்டின்: சென்னையில் ஓடுகிற டாக்சிகள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாண்டிச்சேரி சம்பந்தப்பட்ட கேள்வி.

திரு. டி. மார்டின்: இந்த வண்டிகளில் உள்ள மீட்டர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான ரேட்டைக் காண்பிக்கிறது. ஆகவே இந்த வண்டிகளில் உள்ள மீட்டர்களை எல்லாம் ஒழுங்கு செய்து எல்லாம் ஒரேவிதமான ரேட்டைக் காண்பிக்கும்படியாக ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக்கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

Bus Stand at Esplanade

* 222 Q.—THIRU K. VINAYAKAM: (On behalf of DR. H. V. HANDE): Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Corporation of Madras propose to reconstruct the bus stand in Esplanade, Madras (near the Corporation fruit market)?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஆம்.

திரு. கே. விநயகம்: ஆம் என்றால் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்? எவ்வளவு செலவாகும்? எத்தனை வண்டிகள் நிறுத்தப்படுவதற்கு வசதி உடையதாக இருக்கும்? இப்போது இருக்கிற இடம் நெருக்கடியானதாக இருக்கிறது என்பதற்காக வேறு இடத்தில்—நந்தனத்தில் ஏற்படுத்தவேண்டும் என்கிற சிபார்சு செய்யப்பட்டதே—அந்தக் குழுவில் நானும் இருந்தேன்—அது கைவிடப்பட்டதா? இப்போது எந்த இடத்தில் அமைப்பதாக அரசு உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, வெளியூர் பேருந்து நிலையத்தை ரூபாய் 7.95 லட்சம் செலவு மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சி ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட வரைப்படங்கள், மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கு 9—1—1961 அன்று நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் ஒப்பளிப்பு வழக்கப்பட்டது. இதற்கான கடன் கோரிக்கைக்கு ஒப்பளிப்பு வழங்கும் பொருட்டு இத் திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டது. மாநகரில் உள்ள பேருந்து நிலையங்கள்,ப் அங்காடிகள் ஆகியவற்றின் மேம்பாடுகளைக் கருதுவதற்கு 14—9—1964 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் "ராமசாமி குழு" என்று விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. கிராம வளர்ச்சி உள்ளாட்சி நிர்வாகத்துறை செயலாளரின் அறையில் நடைபெற்ற விவாதத்தை ஒட்டி வெளியூர் பேருந்து நிலை திட்ட விவரங்கள் அடங்கிய செயற் குறிப்பு ஒன்று கோடு வரையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது, செயலாளரின் பார்வைக்காகவும், கடன் வழங்குவதற்காகவும், அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காகவும் அனுப்பப்பட்டது. அப்போது முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களுக்கு சிறப்பு ஆலோசகராக இருந்த